பெருங்கதை அறிமுகம்

தமிழண்ணல்

பெருங்கதை அறிமுகம்

தமிழண்ணல்

மீனாட்சி புத்தக நிலையம்

48, மயூரா வளாகம், தானப்ப முதலி தெரு,

மதுரை - 625 001.

முதற் பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2046, ஆவணி, செப்டம்பர் 2015.
விலை.ரூ. 30.00/-

<u>நூல் விவரப்பட்டியல்</u>

நூலின் பெயர்	:	பெருங்கதை அறிமுகம்
ஆசிரியர்	:	தமிழண்ணல்
நூலின் தன்மை	:	காப்பிய அறிமுகம்
விலை	:	ரூ. 30.00
பக்கங்கள்	:	32
எழுத்து	:	11 புள்ளிகள்
நூல் அளவு	:	14 X 22 செ.மீ. டெம்மி
பைண்டிங்	:	அட்டைக் கட்டு
தாள்	:	வெள்ளைத்தாள்
ஒளி அச்சு	:	ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை.
அச்சிட்டோர்	:	கணபதி பிராசஸ், சென்னை.

MEENAKSHI PUTHAKA NILAYAM
Mayura Complex, 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.
☎ Off : 2345971 Resi : 2560517
E-Mail: meenakshiputhakam@hotmail.com

பெருங்கதை அறிமுகம்

தமிழ் இலக்கிய உலகில் 'காப்பிய வகை' தனிச்சிறப்புடன் திகழ்கிறது. தமிழில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம், இசுலாம், கிறித்தவம் என எல்லாச் சமயங்கட்கும் பெருங்காப்பியங்கள் இருத்தல் குறிப்பிடத்தக்க சிறப்பாகும். அவற்றுள் சமண சமயம் சார்ந்தது 'பெருங்கதை' என்ற காப்பியம் ஆகும்.

பைசாச மொழியில் குணாட்டியர் என்பார் எழுதியதாகக் கூறப்படும் 'பிருகத் கதா' என்ற தொடரின் மொழி பெயர்ப்பாகவே 'பெருங்கதை' என்ற பெயர் காணப்படுகிறது. எனவே இதனை அதன் வழிநூல் எனக் கருதுவாராயினர். துர்விநீதன் என்ற கங்கராசன் பைசாச மொழியிலிருந்து இதனை வடமொழியில் பெயர்த்த காலம் கி.பி.5 அல்லது 6ஆம் நூற்றாண்டு என்பர். மேலும் பல வடமொழி நூல்கள் உதயணன் கதையைக் கூறுவனவாக உள்ளன. அவற்றுள் கதா சுலோக சங்கிரகம், பிருகத் கதா மஞ்சரி, பிருகத் கதாசரித் சாகரம் போல்வன குறிப்பிடத்தக்கன. தமிழிலும் உதயண குமார காவியம், வச்சத் தொள்ளாயிரம் போல்வன உதயணன் கதையைக் கூறுவனவேயாம். இவற்றுள் 'பெருங்கதை' எந்த அளவில் கதைப்போக்கினால் முற்கூறிய நூல்களுடன் ஒத்தும் வேறுபட்டும் காணப்படுகிறது என்பது ஆராயத்தக்கதாகும். வைதிக சமயச் செல்வாக்குக் காலத்தில் பாரத, இராமாயணக் கதைகள் பாரத நாடெங்கும் பரவின. அதுபோலச் சமண சமயச் செல்வாக்குக் காலத்தில் உதயணன் கதையாகிய இப்பெருங்கதை, நாடெங்கும் பரவினதாதல் வேண்டும். அதனைப் பலரும் சிறுசிறு வேறுபாடுகளோடு தத்தமது நூல்களில் எழுதினர் என்றும் தமிழில் கொங்குவேளிர் தாம் செவிவழியாகக் கேட்ட கதையையும் 'பிருகத்கதா' விலுள்ள கதைப்போக்கினை ஓரளவு ஏற்றுக் கொண்டும் இதனைத் தமிழ்ப்பண்பாட்டிற்கு ஏற்ப எழுதினார் என்பதே பொருத்தமாகும். எனவே இது வழி நூல் என்பதை விட முதனூல் என்று சுட்டுமளவு பெருமையுடையது என்பது போதரும்.

எங்ஙனமாயினும் தமிழகமல்லாத வடநாட்டைக் காப்பியக் களமாகக் கொண்டு, வடநாட்டு மன்னன் ஒருவனது வரலாற்றைப் புனைகிறது பெருங்கதை. முதன்முதலாகப் பிறநாட்டுக் கதை ஒன்றைத் தமிழ்ப்படுத்திய பெருமை பெருங்கதைக்கே உண்டு. கதை மிகப்பெரியதாகவும் நீண்டதாகவும் இருத்தலின் பெருங்கதை என்ற பெயர் வந்தது எனலாம். பெருமைமிக்க மன்னனது கதையாதலின் அப்பெயர்த்தாயிற்று என்றும் கூறலாம். எவ்வாறோ வடமொழியிலும் உதயணன் கதைக்கு பிருகத்கதை அஃதாவது பெருங்கதை என்ற பெயர் பொதுவாக ஏற்பட்டு விட்டது. எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழில் புதிய காப்பிய மரபுகள் பலவற்றைத் தோற்றுவித்த காப்பியம் என்பதாலும் கலைகள், கைத்தொழில்கள், அணிகள், ஆடைகள், படைகள், அரண்கள், விழாக்கள் போன்றவற்றையும் மக்களின் பழக்கவழக்கங்களையும் சமயவுண்மைகளையும் விரித்து விளக்குகிற கலைக்களஞ்சியமாக இருப்பதாலும் கூடப் 'பெருங்கதை' என்ற பெயர் பெருமைமிக்க இக்காப்பியத்திற்கு மிகவும் பொருந்தி வருகிறது.

இதனை எழுதியவர் 'கொங்குவேளிர்' என்பார். இவர் கொங்கு நாட்டைச் சேர்ந்த குறுநில மன்னராவார் என்றும் விசயமங்கலம் என்ற ஊரினர் என்றும் கொங்குமண்டல சதகத்தாலும் அறிகிறோம். இந்நூற்குக் 'கொங்குவேள் மாக்கதை' என்றும் பெயருண்டு. திருவள்ளுவர், இளங்கோ, சேக்கிழார் என்பன போலக் 'கொங்குவேளிர்' என்பதும் இயற்பெயரன்று; குடிப்பெயரேயாகும். இவ்அரசப்புலவர் தம் காலத்தே சிறப்புற்றோங்கிய சமண சமயத்தைத் தழுவியவர். இவருக்குச் சங்க இலக்கியத்திலும் திருக்குறளிலும் நல்ல பற்றும் பயிற்சியும் உண்டு என்று தெரிகிறது. சிலப்பதிகார உரையாசிரியராம் அடியார்க்கு நல்லார் "கலியும் குருகும் வெண்டாளியும் முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதை" என்று இதைச் சிறப்பிப்பார்.

ஒரு தனிப்பாடல்,

"திருத்தக்க மாமுனிசிந் தாமணி கம்பன்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம் – உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் குறளணுகேம்
எங்கெழில் என் ஞாயி றெமக்கு".

என்று கூறும். இதன்கண் சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் திருக்குறள் ஆகியவற்றுடன் இப்பெருங்கதையும் சமமாக வைத்துக் கூறப்பட்டிருப்பது இதன் பெருமையை உணர்த்தும். இருந்தும் இது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகச் சேர்க்கப்படாதது வியப்பையே தருகிறது.

இக்காப்பியம் தோன்றிய காலத்தைப் பற்றிப் பல கருத்துகள் உண்டு. கி.பி.எட்டாம் நூற்றாண்டு என்றும் அதற்கு ஒன்றிரண்டு முற்பட்ட நூற்றாண்டுகளில் தோன்றியதென்றும் இன்று கிடைக்கும் தமிழ்க் காப்பியங்கள் அனைத்திற்கும் முற்பட்டதென்றும் பலவாறு கூறியுள்ளனர். எனினும் சிலப்பதிகாரம் மணிமேகலையாகிய இரட்டைக்காப்பியங்கட்குப் பிற்பட்டதென்றும் சீவகசிந்தாமணி முதலிய பிற காப்பியங்களனைத்திற்கும் முற்பட்டதென்றும் பெரும்பான்மையினர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதன்கண் உள்ள ஆசிரியப் பாக்கள் சங்கப் பாடல்கள் போன்ற நடைச் செறிவுடையன என்றும் சங்க இலக்கியச் சொல்லாட்சிகளும் தொல்காப்பிய இலக்கணம் தழுவிய தொடர்களும் இதன்கண் உள்ளன என்றும் இக்கால ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். எங்ஙனமாயினும் கடைச்சங்க காலத்திற்குப் பிறகும் தேவார காலத்திற்கு முன்புமே தமிழகத்தில் சமணசமயம் மேலோங்கி நின்றதாகலின், அக்காலப்பகுதியிலேயே பெருங்கதை போன்ற சமணப் பெருங்காப்பியம் தோன்றியிருக்கக்கூடும் எனலாம்.

இன்று நமக்குக் கிடைக்கும் பெருங்கதைக் காப்பியத்தின் முற்பகுதியில் 31காதைகளும் இடையில் சில பகுதிகளும் இறுதிப் பகுதிகள் சிலவும் காணப்பட்டில. இறுதியில் 'துறவுக்காண்டம்' என்றே ஒரு காண்டம் இருந்து மறைந்திருக்க வேண்டும் என்பர். இச்சிதைவுகளுக்கு அப்பாலும் நமக்குக் கிடைப்பன ஐந்து காண்டங்கள். அவை முறையே உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம் என்பன. சுமார் நூறு காதைகளும் 16213 அடிகளும் இதில் அடங்கியுள்ளன. இந்த அளவிலேனும் நாம் இக்காப்பியத்தைப் பெறுவதற்குத் துணை நின்றவர், ஏடுகளைத் தேடித் தொகுத்து வெளியிட்ட தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமினாதையர் ஆவார்கள். அவர்கட்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடப்பாடு உடையதாகும்.

பெருங்கதையின் அமைப்பு முதற்கண் சிந்திக்கத்தக்கதாகும். இந்நூல் முழுவதும் 'நிலைமண்டில ஆசிரியப்பாவால்' அமைந்துளது. ஐம்பது, அறுபது அடிகள் கொண்ட சிறுசிறு ஆசிரியப்பாக்களையும் 300, 400 அடிகள் கொண்ட நீண்ட ஆசிரியப்பாக்களையும் இதன்கண் காண்கின்றோம்.

சங்க இலக்கியத்திலுள்ள, இரண்டாயிரத்திற்கு மேற்படக் கிடைத்துள்ள ஆசிரியப்பாக்கள் அனைத்தும் ஈற்றயலடி முச்சீராக வரும் நேரிசை ஆசிரியப்பாக்களேயாகும். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பெருங்கதையும் நிலைமண்டில ஆசிரியப்பாக்களால் யாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க வேறுபாடாகும்.

வாய்மொழி இலக்கியத் தாக்கத்தால் பாடல் முடிவதைக் குறிக்க ஈற்றயலடி முச்சீராக அமைந்ததென்பர். கதை அல்லது தொடர் நிகழ்ச்சி கூறும் பாடலில் அதற்கு இடமில்லையாதலின் அனைத்தும் நான்குசீர் கொண்ட நிலமணடிப்பாவாகப் பாடப்பட்டன போலும்.

தொன்மையான பழங்கதையைப் பாடுவதாலும், இழுமென்ற மொழியால் விழுமியது நுவல்வதாலும் பரந்த மொழியால் அடிவரையறை மிகுந்து செல்வதாலும் இதன்கண் தொன்மை, தோல் என்ற காப்பிய வனப்புக்கள் இருப்பதாக விளக்குவர் "ஞ முதல் ன ஈறாக" ஒற்றெழுத்தில் முடிவது என்று இங்கு ஒரு நூற்பா காணப்படுகிறது. இதற்குப் பேராசிரியர் உரை எழுதும் பொழுது, "இயைபு என்றதனானே பொருளும் இயைந்து சொல்லும் இயைந்து வரும் என்பது கருத்து; சீத்தலைச்சாத்தனாரால் செய்யப்பட்ட மணிமேகலையும் கொங்கு வேளிரால் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் போல்வன" என்று விளக்குகிறார். மணிமேகலை வெவ்வேறு ஆசிரியப்பாக்களால் ஆகியிருந்தாலும் முதற்காதையும் அடுத்த காதையும் பொருளால் இயைந்து வருவதையே காண்கிறோம். ஆனால் பெருங்கதையோ, ஒரு காதைக்கும் அடுத்த காதைக்கும் தொடர்புபடவும் ஒரு காண்டத்திற்கும் அடுத்த காண்டத்திற்கும் தொடர்புபடவும் 'அந்தாதித் தொடை' அமைந்து வருகிறது.

உதயணன் பிரச்சோத மன்னன் வேண்டியபடி மதங்கொண்ட யானையை அடக்குகிறான். உஞ்சைக் காண்டத்தின் முப்பத்திரண்டாங் காதையாகிய, நமக்குக் கிடைக்கிற காதை கீழ்வருமாறு முடிகிறது:

"தகைமலி வேழம் தலைக்கடை இழிதந்து
அகம்புக்கனனால் அரசவை விடுத்தென்"

அழகுமிக்க யானையின் எருத்தத்தினின்றும் இறங்கி அரசவையை விட்டுச் சென்று தனக்கு மன்னன் அளித்த மாளிகையினுட் புகுந்தான் என்பது பொருள்.

அடுத்த காதையின் தொடக்கம்,

"அரசவை விடுத்தபின் அணிநகர் முன்னித்
தொடர்பூ மாலைக் கடைபல போகி"

என்பது, அரச சபையை விடுத்து, தனக்கு அளிக்கப்பட்ட அழகிய மாளிகையை நோக்கிச் சென்று, பூத்தோரணங்கள் பல இடப்பட்ட வாயில்களைக்கடந்து என்று கதை செல்கிறது. இவ்வாறு ஒவ்வொரு காதையின் முடிவும் அடுத்த காதையின் தொடக்கமாகவும், ஒவ்வொரு காண்டத்தின் முடிவும் அடுத்த காண்டத்தின் தொடக்கமாகவும் இருப்பது பெருங்கதைக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

உண்மையில் இதனையும் 'இயைபு' என்னும் வனப்பு எனக்கூறலாம். சொல்லும் பொருளும் இயைந்து வருவுதே இயைபாகும்.

சிலப்பதிகாரம் நாடக அமைப்புடையது என்று பலரும் போற்றுகின்றனர். பெருங்கதையின் முதலும் முடிவும் காணப்படாமல் போயினும் இது கதை கூறும் போக்கையே மிகுதியாகக் கொண்டுளது. இதற்கு இவ்அந்தாதி அமைப்பும் ஒரு காரணம் எனலாம். எடுத்துக்காட்டாக, வத்தவ காண்டத்தில் வரும் முதல் பத்துக்காதைத் தலைப்புகள் இவை : கொற்றங் கொண்டது, நாடு பெற்றது, யாழ் பெற்றது, உருமண்ணுவா வந்தது, கனாவிறுத்தது, பதுமாவதியை வஞ்சித்தது, வாசவதத்தை வந்தது, தேவியைத் தெருட்டியது, விருத்தி வகுத்தது, பிரச்சோதனன் தூது விட்டது என்பன. இவற்றையெல்லாம் நோக்கும் போது பெருங்கதை தன் பெயருக்கு ஏற்ப, இக்காலப் புதினம் என்ற நாவல் இலக்கியம் போலக் கதை கூறும் போக்குடையது என்பது தெற்றெனப்புலனாகும்.

வடநாட்டுக் கதை ஒன்றை எடுத்துக் கொண்டாலும் அதில் அகத்திணை, புறத்திணை மரபுகளையும் தமிழர் பண்பாடு, பழக்கவழக்கங்களையும் புகுத்தி

அதனைத் தமிழ்க் கதை போலவே உணரச்செய்யும் மரபினைத் தோற்றுவித்தது இக்காப்பியம் எனலாம். உதயணனைத் 'தமிழியல் வழக்கினன்' என்றுதான் கொங்குவேளிர் சிறப்பித்துக் கூறுகிறார். உஞ்சைக் காண்டத்தில் 'மருத நிலங்கடந்தது', 'முல்லை நிலங்கடந்தது', 'குறிஞ்சி நிலங்கடந்தது' 'நருமதை கடந்தது', 'பாலை நிலங்கடந்தது' ஆகிய காதைகளை இணைத்து, தமிழ் இலக்கியங்காட்டும் ஐந்திணை அமைப்பை வடநாட்டில் காண முயன்றுள்ளார். வடசொற்களைத் தமிழ் முறைப்படி பதுமாவதி, தக்கணை, பொக்கரணி, மோக்கம், விலாவணை, வத்தவன், உதயன் என்றெல்லாம் ஆள்கின்றார். இடபகன் என்ற பெயரை 'ஏற்றுப் பெயரண்ணல்' என்று மொழி பெயர்த்துத் தருகிறார்.

வாசவதத்தையும் உதயணனும் முன்னதாகக் களவுமுறைக் காதல் கொண்டதாகப் பாடுகிறார். களவு, கற்பு எனப் பிரித்து, முன்னதன் வழிப்பட்டதாகப் பின்னதைப் புனைவது தமிழ் வழக்காகும். சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் கூட இம்மரபு முழுவதுமாகப் பின்பற்றப்படவில்லை. ஆனால் பிற்காலத்தில் திருத்தக்கதேவர், கம்பர் எல்லாம் இதற்கு இடம்கண்டு பாடத்தவறவில்லை. எனவே கதைப் போக்கான காப்பியத்திலும் திருமணத்திற்கு முன் களவுக்காதலைப் பாடும் மரபைக் கொங்குவேளிர் தோற்றுவித்தார் எனலாம்.

காதல் 'ஒன்றே வேறே என்றிரு பால்வயின், ஒன்றி உயர்ந்த பாலது ஆணையால்' தோன்றும் என்று தொல்காப்பியர் கூறுவர். அவ்வாறே வெவ்வேறு நாட்டவராகிய வாசவதத்தையும், உதயணனும் கண்டு காதல் கொண்டது 'தென் கடலிட்ட முளை ஒன்று வடகடல் நுகத்துளையில் வந்து பொருந்தியதுபோல' என்று கொங்குவேளிர் உவமை கூறுகிறார். இவ்உவமை பிற்கால ஆசிரியர் பலராலும் எடுத்தாளப்பட்டதாகும்.

> "தென்கடல் இட்டதோர் திருமணி வான்கழி
> வடகடல் நுகத்துளை வந்துபட் டாஅங்கு
> நனிசேண் இட்ட நாட்டின ராயினும்
> பொறைபடு கருமம் பொய்யா தாகலின்
> சிறைபடு விதியிற் சென்றவட் குறுகி"

என்பது பெருங்கதை.

'நளகிரி' என்ற யானையை அடக்கினான் உதயணன். அதனால் உதயணனைச் சிறைப்பிடித்து வந்தனர். தன் நகரை அழிக்கவிருந்த யானையை அடக்கியதால், இப்போது உதயணன் பிரச்சோதன மன்னனின் அவைக் களத்தில் வந்து நிற்க நேர்ந்தது.

அவன் பட்டத்து யானையின் மேலே நிற்க, வாசவதத்தை அரண்மனை மேல் மாடத்தில் களிறடக்கியவனைக் காண நின்ற அந்தப்புர மகளிர் குழுவில் நின்றாள். இங்ஙனம் சூரியனும் மதியமும் ஒருங்கிணைந்தது போல இருவரும் ஒருவர் ஒருவரைப் 'பருகுவார்' போல நோக்கினர். இக்காட்சியை வேளிர் கூறும் திறம் இது :

"சிறைபடு விதியிற் சென்றுஅவட் குறுகி
மதியமும் ஞாயிறும் கதிதிரிந்து ஓடிக்
கடல்நிற விசும்பின் உடனின் றாங்குப்
பைந்தொடிச் சுற்றமொடு தந்தை தலைத்தாள்
ஆயத் திடையோள் பாசிழைப்பாவை
யானை மிசையோன் மாமுடிக் குரிசில்
இருவரும் அவ்வழிப் பருகுவனர் நிகழ..."

இக்காதற் காட்சியைப் பார்த்த கம்பர் 'மிதிலைக் காட்சி'யைப் படைக்கக் காண்கிறோம். எண்ணரும் நலத்தினாள் இனையள் நின்றுழி, அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என்றும், "பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து, இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்" என்றும் ஓவியக் காட்சியாய்க் காட்டுகிறார்.

பின்னர்த் திருமணம் செய்து கொள்ளப்போகின்ற கதைமாந்தர்களை, முன்னரே கண்டு, கண்ணின் நோக்கு ஒன்றுபடச் செய்து, காதல்கொள வைப்பதும், பின்பு அவர்களின் காமநோயை வருணிப்பதும் இறுதியில் அவர்கள் திருமணத்தைக் கூறுவதுமாகிய தமிழ்க் காப்பியக் கொள்கைக்கு வித்திட்டது கொங்குவேளிரின் மாக்கதை. இவ் ஒரு சிறப்பு மட்டுமன்று; இது போன்ற பல முன்னோடியான மரபுகளைத் தோற்றுவித்ததுமாகும்.

பெருங்கதை பெயருக்கேற்ப அடியளவாலும் பெரியது. சிலப்பதிகாரம் ஏறத்தாழ 5000 அடிகளை உடையது. மணிமேகலை 4759 அடிகளை உடையது. சிதைந்த நிலையிலும் 16213 அடிகளை இன்றும் பெற்றுள்ள பெருங்கதை, இவை ஒவ்வொன்றையும் போல மும்மடங்கு பெரியதாகும். ஏறத்தாழ நூறு கதை மாந்தர்கள் பெருங்கதையில் இடம் பெறுகின்றனர். தலைமைக் கதைமாந்தரின் பாத்திரப்படைப்புகள் மிகச்சிறப்பாக அமைந்துள்ளன. யூகி என்பானை ஒத்த சூழ்ச்சிவல்ல அரசியல் தந்திரசாலியைப் பிற காப்பியங்களில் காணுதல் அரிதேயாகும். வாசவதத்தையின் பேரழகும் பண்பும் வியத்தற்குரியன. உதயணன் கலைஞனாக, வீரனாக, சுவைஞனாக, பெரும் பண்பினனாகப் படைத்துக் காட்டப்படுகிறான்.

உதயணனைக் கூறுமிடத்தே,

"இளமையும் வனப்பும் இல்லொடு வரவும்
வளமையும் தறுகணும் வரம்பில் கல்வியும்
தேசத்து அமைதியும் மாசில் சூழ்ச்சியொடு
எண்வகைப் பண்பும்" உடையவனாகச் சித்திரிக்கப்படுகின்றான்.

சீவகசிந்தாமணியில் சீவகன் 13 பண்புகள் உடையவன் என்று தேவர் எண்ணிக் கூறுவார். சமண நூல்களுள் இவ்வாறு கதைமாந்தர் பண்புகளை எண்ணிக்கூறும் திறம் காணப்படுகிறது.

வாசவதத்தை

"ஒண்மையும் நிறையும் ஓங்கிய ஒளியும்
பெண்மையும் பெருமையும்...
நிலம்புடை பெயரினும் விசும்புவந்திழியினும்
கலங்காக் கடவுள் கற்பும்"...

உடையவள் ஆவாள். வாசவதத்தையின் அழகைச் சங்கிலித் தொடர்போல், வருணித்து உயிர் ஓவியமாகக் காட்டுகிறார் பெருங்கதை ஆசிரியர்.

ஆற்றுக் கருமணல் போலக் கூந்தல் என்றால், அதன் சுழிபோல உந்தி வயிறு விளங்குகிறது. வில்போலப் புருவம் வளைந்து விளங்க, அம்புகள் போலக்கண்கள், கூர்மையாய்த் திகழ்கின்றன. பிறை போன்றது நெற்றி; அப்பிறை நிறைவு பெற்ற முழுமதி போன்றது முகம்! கிளி எனப் பேச்சு ஒலிக்கிறது; அக்கிளியின் அலகுபோல் விரல் நகம் செம்பஞ்சுக் குழம்பூட்டிச் சொலிக்கிறது. மூங்கில் போலத் தோள் திரட்சியுற்று விளங்க, அதில் பிறக்கும் முத்துக்களைப் போல அவளது முறுவல் விளங்குகிறது! காந்தள் அரும்புபோலக் கைவிரல் என்றால், அதன் துடுப்புப் போன்ற முழுப்பூவின் வடிவமாக முன்கை விளங்குகிறது. அவள் நடையை அன்னம் என்று சொல்லலாம்; ஆனால் அவள் காதல் உள்ளமோ, அவ்வன்னங்கள் கூடி வாழ்வதையே நினைவூட்டுகிறது. ஆம், வாசவதத்தை இத்துணை அழகும் ஒருங்கிணைந்த, மிக்க நாகரிகமுடைய நங்கை ஆவாள்:

சங்கப்பாடல் போன்ற நடைநயம் மிகுந்த பாடற்பகுதி இதுதான்.

“யாற்றறல் அன்ன கூந்தல் யாற்றுச்
சுழியெனக் கிடந்த குழிநவில் கொப்பூழ்;
வில்லெனக் கிடந்த புருவம் வில்லின்
அம்பெனக் கிடந்த செங்கடை மழைக்கண்;
பிறைஎனச் சுடரும் சிறுநுதல் பிறையின்
நிறைஎனத் தோன்றும் கறைபயில் வாண்முகம்
கிளி என மிழற்றும் கிளவி, கிளியின்
ஒளிபெறு வாயின் அன்ன ஒள்ளுகிர்
வேயெனத் திரண்ட மென்தோள் வேயின்
விளங்குமுத் தன்ன துளங்கொளி முறுவல்
காந்தள் முகிழன்ன மெல்விறல் காந்தள்
பூந்துடுப்பன்ன புனைவளை முன்கை
அன்னத்தன்ன மென்னடை அன்னத்துப்
புணர்வின் அன்ன தண்டாக்காதல்
அணிக்கவின் கொண்ட அதிநாகரிகத்து”

நங்கை என நவிலும் இப்பகுதி, வாசவதத்தையின் அழகைச் சொற்சித்திரமாகக் காட்ட முயல்கிறது. தொடர்புடைய இரண்டிரண்டு உவமைகளாக அடுக்கும் இவ்வருணணை சிறுபாணாற்றுப்படையில் வரும் விறலி வருணனைபோல் காணப்படுகிறது.

சாங்கியத்தாய் எனப்படும் தவமூதாட்டியும் இதன்கண் சான்றாண்மை மிக்கவளாகப் படைக்கப்பட்டுள்ளாள். மேலும், பதுமாவதி, மானனீகை, விரிசிகை, காஞ்சனமாலை போல் வாரனைவரும் மிகவும் சிறப்புடன் படைக்கப்பட்டுள்ளனர்.

பெருங்கதையின் கதைச் சுருக்கம் இதுதான்:-

வத்தவநாட்டுக் கௌசாம்பி நகர மன்னனாகிய உதயணன் கதை இது. அவனை அவந்தி நாட்டரசனாகிய பிரச்சோதனன். போரில் வென்று சிறைப்பிடித்து வந்துவிட்டான்.இந்நிலையில் பிரச்சோதனின் உஞ்சை நகரில் நளகிரி என்ற யானைக்கு மதம் பிடித்துவிட்டது. அதனை உதயணனால் அடக்க முடியும் என்றனர் அமைச்சர். மன்னனது ஆணைப்படி உதயணன் யாழ் வாசித்து யானையை அடக்கினான். அப்போது அரண்மனையில் வாசவதத்தையைக் கண்டு காதல் கொண்டான். பிறகு அவளுக்கு யாழ் கற்பிக்கும் ஆசிரியனாக மன்னனால் நியமிக்கப்பட்டான். அவள்பாற் கொண்ட காதலால் தான் மெலிவுற்றதை மறைக்க நருமதை என்ற பரத்தையை நாடியதாகப் பழி பூண்டான். பிறகு யூகியின் சூழ்ச்சியால் அங்கிருந்து பிடி ஒன்றின் மேல் வாசவதத்தையை ஏற்றிக் கொண்டு உதயணன் தப்பித்துச் சென்றான். வழியில் நான்கு நிலங்களையும் கடந்து சென்ற போது, பிடி இறந்தது. வேடர் வளைத்தனர். இறுதியில் வேடர்களை வென்று, நண்பர்கள் உதவியுடன் சயந்தி நகரத்தை அடைந்தான். இது காறும் உஞ்சை நகரில் நடந்த கதையே பெரும்பான்மையாதலின் இதற்கு உஞ்சைக்காண்டம் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது காண்டமாகிய இலாவாண காண்டத்தில் உதயணன் இலாவாண நகரத்தில் தங்கியபொழுது நடந்த நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. தம் உறவினர் நகரமாகிய சயந்தி நகரத்தே, வாசவதத்தையுடன் உதயணன் புகுந்தான். அவளை அங்கு மணம் புரிந்து கொண்டான். அங்கு காமத்தில் தேங்கிக்கிடந்த

அவனை நல்வழிப்படுத்த எண்ணிய யூகி தான் இறந்துவிட்டதாகச் செய்தியைப் பரப்பினான். பிறகு விரிசிகை என்ற பேதைப்பருவத்துப் பெண்ணை அவன் சந்திக்க நேர்ந்தது. உதயணனைத் திருத்துவதற்காக யூகி உதயணனிடமிருந்து வாசவதத்தையை பிரித்தான். அவள் அரண்மனையில் பற்றிக்கொண்ட நெருப்பில் இறந்துவிட்டதாக நம்பிய உதயணன் அழுது புலம்பினான். உதயணனுக்குச் சான்றோர் கழிபெருங்காமத்தால் விளையும் தீமையை எடுத்துணர்த்தினர். யூகி, வாசவதத்தை முதலியோர் உதயணன் அறியாமல் மறைந்து உறைந்தனர்.

உதயணன் மகதநாட்டிலிருந்த பொழுது நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துரைக்கும் அடுத்த காண்டத்திற்கு மகத காண்டம் என்று பெயர். முதற்கண் உதயணன் வருத்தமும் நண்பர் தேற்றுதலும் கூறப்படுகின்றன. மகத மன்னன் தங்கையாகிய பதுமாவதியைக் கண்டு மணக்க விரும்புகிறான். பின்னர் அவளை மணப்பதும் பகைவரை வெல்வதுமாகிய பல செய்திகள் இப்பகுதியில் விரித்துக் கூறப்படுகின்றன.

நான்காவதாகிய வத்தவ காண்டத்தில் உதயணன் தன் நாட்டில் இருந்த பொழுது நடந்த நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. இதன்கண் உதயணன் அரசு கட்டில் ஏறி நாட்டைப் புரந்தருதலும் வாசவதத்தையை மீண்டும் அடைதலும் மானனீகை, விரிசிகை ஆகிய இருவரையும் மணத்தலும் ஆகிய செய்திகள் பேசப்படுகின்றன.

ஐந்தாவதாகிய நரவாண காண்டத்தில் உதயணனுடைய மகனாகிய நரவாணனுடைய பிறப்பு முதலியன கூறப்படுகின்றன. வாசவதத்தை கருக்கொண்டு மகப்பெற்ற செய்தி விரித்துரைக்கப்படும் முறை சிறப்புடையதாகும். நண்பனும் சிறந்த இராசதந்திரியும் ஆகிய யூகிக்கு உதயணன் சிறப்புச் செய்யும் பகுதி இதில் உளது. நரவாணன் மதனமஞ்சிகை என்பாளைக் காதலித்து மணக்கிறான்.

இக்கதையில் உதயணன் பல கலைகளிலும் வல்லவனாகப் படைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். யாழ் இசையில் வல்லவனாக இருக்கிறான். பிரச்சோதனன் மக்களுக்கு போர்க்கலை பலவற்றையும் கற்பித்த நல்லாசானாக

விளங்குகிறான். சீவகசிந்தாமணியில் சீவகனும் இது போல பல்கலை வல்லுநனாகப் படைக்கப்பட்டுள்ளான்.

உதயணன் வாசவதத்தை, பதுமாவதி, விரிசிகை, மானனீகை என்ற நால்வரை மணக்கிறான். சிந்தாமணியில் சீவகன் எண்மரை மணக்கிறான். இவை ஒப்பிட்டுப் படித்து இன்புறத்தக்கனவாகும். காப்பியத்தலைவனின் பலதாரமணம் சமணக் காப்பியங்களில் இவ்வளவு விரிவாகக் கூறப்பட்டுள்ளதன் நோக்கம் காமத்தின் கரை கடந்த தன்மையைக் காட்டுவதற்காகவே போலும் அல்லது பல்வேறு பண்பு நலன்களைப் பெண்களாக உருவகப்படுத்திக் காப்பியத் தலைவனுக்கு மணம் செய்து வைக்கும் 'படிமப் பொருளும்' இவற்றில் இடம் பெற்றுள்ளனவோ என்று ஆராயலாம்.

உதயணனது ஆட்சிச் சிறப்பைக் கூறுமுகத்தால் 'நல்லாட்சி' எப்படி அமைய வேண்டும் என்பதைக் கொங்குவேளிர் திறம்பட எடுத்துக்காட்டுகிறார். அவரும் ஒரு சிற்றரசர் அல்லவா? வத்தவநாட்டு மக்களைக் கொடுமைக்கு ஆளாக்கியிருந்த கொடுங்கோலனாகிய ஆருணி வேந்தனை வென்று ஓட்டிய உதயணன் அரசு கட்டிலேறி நாட்டில் செல்வம் கொழிக்கும்படி செய்தான். தொன்றுதொட்டுத் தன் நாட்டில் வாழ்ந்து வரும் குடிமக்களை உயரச் செய்தான். பொய், கொலை, களவு, வஞ்சம் முதலிய தீமைகளை நீக்குகின்ற தன் நேரிய ஆட்சியில் குடிகட்கு எல்லாம் உள்ளம் குளிர முகமன் கூறினான். இன்சொல் இனிதீன்றல் காண்பான் என்பார் திருவள்ளுவர். அவனது இனிய உரையால் மக்களின் துன்பம் பெரிதும் கரைந்துவிடுமன்றோ? இவ்வாறு ஆட்சியாளர் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறான் உதயணன். செல்வமிருந்து இழந்து ஏழையானவர்; உடல் வலிமை தேய்ந்து நோயுற்றவர்; கணவரால் கைவிடப் பெற்று வருந்தும் பெண்டிர் என இத்தகையார் அனைவரையும் காப்பாற்றினான்.

"விளங்கவை நடுவண் வீற்றினி திருந்த
வளங்கெழு தானை வத்தவர் பெருமகன்
வெங்கோல் வேந்தன் வேற்றுநாடு இதுவெனத்
தன்கோல் ஓட்டித் தவற்றின் நாட்டிய

புன்சொற் படுநுகம் புதியவை நீக்கிச்
செங்கோற் செல்வம் சிறப்ப ஓச்சி
நன்னகரத்து நாட்டக வரைப்பினும்
தொன்மையின் வந்த தொல்குடி எடுப்பிப்
படிறு நீக்கும் படுநுகம் பூண்ட
குடிகட்கெல்லாம் குளிர்ப்பக் கூறி..

'குளிர்ப்பக்கூறி' என்பதிலேதான் சிறப்பிருக்கிறது. மக்கள் மனங்குளிருமாறு பேசினானாம் உதயணன். அதுமட்டுமன்று தன்வாழ்வை மிகவும் அனுபவித்து வாழ்ந்தவன் உதயணன். பதுமாவதியுடன் மகிழ்ந்து விளையாடுங்கால் அவனுக்குச் செங்கதிர்ச் செல்வனாம் சூரியன் உதயமும் வீழ்ச்சியும் தெரிந்திலதாம்; திங்களும் நாளும் மறந்தே போய்விட்டதாம்!

"பட்டம் எய்திய பதுமா வதியொடு
முட்டில் செல்வத்து முனிதல் செல்லான்
மட்டுவிளை கோதையொடு மகிழ்ந்துவிளையாடிச்
செங்கதிர்ச் செல்வன் எழுச்சியும் பாடும்
திங்களும் நாளும் தெளிதல் செல்லான்"

என்று கூறுகிறார். "பொழுதிடை தெரியின் பொய்யே காமம்" என்ற சங்க காலக் காதலை இது நினைவூட்டுகிறது.

உதயணன் வாசதத்தையுடன் இன்பம் நுகர்ந்ததையும் இது போல நயம் பொருந்த ஆசிரியர் விளக்குகிறார். புதிய பூங்கொடி போன்ற வளும் புதிய நாணத்தால் பொலிவு பெற்ற வளுமாகிய வாசவதத்தையுடன், அன்னங்கள் கூடி இன்புறுவதுபோலக் கூடி இன்புற்றானாம் உதயணன்.

"புதுவது புனைந்த பூங்கொடி புரையும்
வதுவைக் கோலத்து வாசவதத்தை
புதுமைக் காரிகை புதுநாண்திளைப்பக்
கதிர்விளங்கு ஆரத்துக் காமம் கழுமி
அன்னத் தன்ன அன்புகொள் காதலொடு

பொன்னகர்க் கியன்ற புகரில் புகழ்நகர்
வரைவில் வண்மை வத்தவர் மன்னற்குப்
பொருவில் போகம் புணர்ந்தன்றால் இனிதென்"

புதிய நாணத்தால் திளைத்த நங்கையிடம் புதிய போகத்தைக் கண்ட உதயணன் கதை கூறிவந்த கொங்கு வேளிர் அடுத்த காதையில் "இனிமேல் யூகிக்கு நேர்ந்ததைக் கூறுவேன்! கேளுங்கள்!" என்று கதை கூறுமிடம் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். 'பொருவில் போகம் புணர்ந்தன்றால்' என்று முற்காதையை முடித்தவர், அடுத்த காதையை இவ்வாறு தொடங்குகிறார்.

"போகம் புணர்ந்த பொன்னகர் அவ்வயின்
வேகத் தானை வேந்தன் மகளோடு
ஏகச் செங்கோல் ஏயர் பெருமகன்
போகங் கழுமிப் புணர்ந்து விளையாட
யூகிக்கு இப்பால் உற்றது கூறுவென்..."

இங்ஙனம் கதைத்திருப்பத்தைச் சுட்டித் தொடங்கும் வேளிர் யூகியின் பண்பு நலன்களைப் புகழ்ந்து கூறுகிறார். புகழ்மிக்க வாழ்வுடையவன் ஆன்பால் மலைத்தேனோடு கூடினாற் போன்று கலந்து, வேறு வேறிடத்துச் சென்றிருப்பினும் மாறுபட்டு இயங்குதல் இல்லாத அன்பு கலந்த நட்புப் பண்பினையும் புறமுதுகுகாட்டாத படையினையும் வெற்றிக்குடையினையும் நிலவுலகாளும் மன்னர்க்கு உரிய அரசியல் செயல்களிலே பயின்று முதிர்ந்ததும் பெறற்கரிய நுண்மாண் நுழைபுலம் மிக்கதும் ஆராய்ந்து தெளிந்ததும் ஆகிய அமைச்சுத் தொழில் ஆற்றலையும் உடையவன்.

"பொன்றா இயற்கைப் புகழது பெருமையும்
ஆன்முலைப் பிறந்த வானிற அமிர்தம்
மலைப்பெய் நெய்யொடு தலைப்பெய் தாங்கு
வேறுபட் டேகினும் கூறுபட்டியலா
அன்பினின் அனைஇய நண்பின் அமைதியும்
அசைவில் தானை விசைய வெண்குடைப்

பெருநில மன்னர் கருமங் காழ்த்த
அருமதி நுனித்த அமைச்சின் ஆற்றலும்
இன்னவை பிறவும் தன்வயின் தாங்கி"

உதயணனுக்கு எல்லாவகையாலும் உதவி செய்து வரும் யூகி, அவன் காமத்தில் ஆழ்ந்து அழிந்து போவதையும் விரும்பவில்லை. வாசவதத்தையைச் சேர்த்து வைத்த அவனே பின்பொருகால் அவளைப்பிரித்து வைக்கிறான். தான் இறந்துவிட்டதாக உதயணனுக்குக் கூறச்செய்து, அவனை வருந்தச் செய்கிறான். நண்பராவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவன் கூறுகிறபடி பார்த்தால், அவன் செயல்கள் எல்லாம் மிகையானவை அல்ல; நியாயமே என்பது விளங்கும். அவன் நண்பனுக்குத் தரும் விளக்கம் இது.

நண்பர்....

"அற்றங் காத்தலின் ஆண்மை போலவும்
குற்றங் காத்தலிற் குரவர் போலவும்
ஒன்றி ஒழுகலின் உயிரே போலவும்
நன்றி யன்றிக் கன்றியது கடிதற்குத்
தகவில செய்தலிற் பகைவர் போலவும்
இனையன பலவும் இனியோர்க்கு இயன்ற
படுகடன்.." ஆகும்.

ஒருவனுக்கு நண்பரானவர் அவனுக்குச் சோர்வுவராமல் காப்பதில் வீரர் போல நடக்க வேண்டும்; குற்றம் வாராமல் காத்தலில் அவனது ஐம்பெருங்குரவர் போல நடந்து கொள்ள வேண்டும். கூடி ஒழுகுதலில் அவனது உயிர் போல இருக்க வேண்டும். மிகுதிக்கண் மேற்சென்று இடித்துத் தகவற்ற செயலைத் தடுப்பதில் பகைவர் போல நடக்க வேண்டும். இன்னோரன்ன பிறவற்றையும் செய்து தன் இனிய நண்பரைக் காப்பது அவரது கடமையாகும்.

இத்தகைய கருத்துக் கருவூலங்கள் பலவற்றை உடையதுதான் பெருங்கதையாகும்.

- - -

பெருங்கதையில் உலகியல் சார்ந்த, நாம் தெரிந்து கொள்ள வேண்டிய எத்தனையோ செய்திகள் கூறப்பட்டுள்ளன. அரசியல், அமைச்சியல், போரியல், வணிகவியல் பலவும் விரிவாகக் கூறப்படுவதுடன் சமுதாயம், தொழில், கல்வி, சமயம் பற்றியன பலவும் விளக்கப்பட்டுள்ளன. இதன் சிறப்புணர்ந்த சான்றோர், "பெருங்கதையின்கண் அமைந்த பல சிறந்த செய்திகளையும் முறைகளையும் வேறு எந்த நூலிலும் காண்டல் அரிது", என்று பாராட்டுவர். எடுத்துக்காட்டாகக் "குறிக்கோள் கேட்டது" என்ற பகுதியை எடுத்துக் கொள்வோம். உதயணன் காட்டில் ஒரு துறவியை அடைந்து நிமித்தம் கேட்பதை இப்பகுதி கூறுகிறது. 'குறிக்கோள்' என்றால் இன்று நாம் 'இலட்சியம்' என்ற பொருளில் வழங்குகிறோம். குறி என்பது நிமித்தம் எனப் பொருள்படும். எனவே குறிக்கோள் என்றால் நிமித்தத்தின் பொருள் என்ன? விளைவு என்ன? என்பதைக் கேட்பதாகப் பொருள்படுகிறது. இத்தகைய புதிய சொற்களையும், தொடர்களையும் முதன்முதலாக ஆட்சிக்குக் கொண்டுவந்த பெருமை பெருங்கதைக்கு உண்டு, ஒப்பனை, கச்சம், கத்திரிகை, கார்முகம், கொட்டாரம், கோமான், திருமணம், நீதி, பொத்தகம், விமானம், போன்றவை பெருங்கதை முதன்முதலாகத் தந்த சொற்களில் சிலவாகும்.

உதயணன் குறிக்கோள் - நிமித்தப்பயன் கேட்பதற்காக முனிவரை. அணுகி அவர் காட்டிய இடத்தே அமர்கின்றான். அதில் அமர்ந்த உதயணன் தன் தோழனும் அமைச்சனுமாகிய யூகியை நினைந்து நெகிழ்கின்றான். கவலை தோய்ந்திருந்த அவன் வைத்திருந்த வெண்மலர் நழுவி விழுந்தது. இதனைப் பார்த்து முனிவர் உதயண! நீ பசிய மரம் சார்ந்து இருந்ததால் உன் தோழன் உன்னை அடைவான். உன் இன்பத்திற்கு இடையூறுண்டாகும். அம் மலர் வெறு நிலத்தில் வீழாமல் நின் மடி மீது, உடைமேல் வீழ்ந்தமையால் உனக்கு மீண்டும் அவ்இன்பம் கைகூடும். மண்ணின் மீது இருந்ததால் உன் நாட்டினை நீமீட்டும் பெறுவாய்" என்று குறிவிளக்கம் கூறினார்.

"பத்திப் பன்மலர்ச் சித்திரம் குயின்ற
இயற்றாத் தவிசின் மிசை இருக்கை காட்டக்
கவற்சி மனத்தொடு காண்டக இருந்ததன்
தாள்முதல் சார்ந்து தோள்முதல் தோழனை
உள்ளி உள்ளழிந்து ஒழுகுவரைத் தடக்கையின்

வெள்ளிதழ் நறுமலர் வீழப் பையாந்து
நினைப்புள் ளுறுத்துஅந் நிலைமை நோக்கி
துணிவுகொள் மன்னற்கு முனிவன் கூறும்.

இவ்வாறு நிமித்தத்தைப் பார்த்த முனிவன், அதன் விளைவுயாதாகும் என்பதை மேலே விளக்குகிறான்.

"பசுமரம் சார்ந்தனை ஆதலின் மற்றுநின்
உசிர்ப் பெருந்தோழன் உண்மையும் கூட்டமும்...
திண்ணிதின் ஆகும்...

விரும்பிநீ பிடித்த வெண்மலர் வீழ்ச்சி
பொருந்திநீ அளக்கும் பொருவில் போகத்து
இடையூறுண்மை முடியத் தோன்றும்
வீழ்ந்த வெண்மலர் வெறுநிலம் படாது
தாழ்ந்த கச்சைநின் தாள்முதல் தங்கலின்
பிரிந்த போகம் பெயர்த்தும் பெறுகுவை
நிலத்துமிசை இருந்தனை யாதலின் மற்றுநின்
தலைப்பெரு நகரமொடு நன்னாடு .... வெற்றிபெற்று

அடைவதுறுதி என்று முனிவர் கூறக் காண்கிறோம். இதனால் நம் நாட்டில் தொன்று தொட்டு இருந்து வரும் நிமித்தம் பார்க்கும் முறையும், அந் நிமித்தத்திற்குப் பொருள் கொள்ளும் முறையும் நம்மால் அறியப்படுகின்றன. சங்க இலக்கியம் கற்றார் தமிழர்கட்கு இருந்த இந்நிமித்தம் – விரிச்சி போன்ற நம்பிக்கைகளை நன்கு அறிவர்.

இந்நூல் பல்வகைக் காதலையும் புனைந்து பாடினாலும் சமண நூலேயாகும். எனவே தக்க இடங்களில் சமணக் கருத்துகள் நன்கு எடுத்துரைக்கப்படுகின்றன. கசப்பு மருந்தை வெல்லக்கட்டியில் வைத்துக் கொடுப்பது போல காதற் கதையிடையே சமணக் கருத்துகள் விரவிக் கூறப்படுகின்றன. உதயணன் தன் நண்பன் யூகியையும், தன் மனைவி

வாசவதத்தையையும் இழந்ததாக நினைந்து அழுது புலம்புகிற நேரம். அச்சமயம் பார்த்து அவனுடைய தோழர்களில் துணிவுடைய சிலர் முன்வந்து அவனுக்கு அறிவுரை பகர்கின்றனர்.

"தாமரை போன்ற கண்களையும் அழகுடைய மார்பினையும் உடைய பெருமானே! காமத்தினது தன்மையை ஆராய்ந்தால் அதன் இழிவு புலப்படும். ஒருவன் கடலிலே அகப்பட்டு, சூறைக்காற்றால் கலம் உடைந்து, உடை மரம் பற்றி ஒரு தீவிலே கரையேறுகிறான். உயிரினமே இல்லாத அத்தீவில் நச்சினையுடைய வண்ண ஒளி வீசும் கனிகள் பல தொங்குகின்றன. அவற்றைத் தோற்றத்தால் மயங்கி, பசி தீர்ப்பன என்று கருதி, தேவர்கள் நம் உயிரைப் பாதுகாக்க அனுப்பிய அமிழ்தமே ஆகுமென்று பாராட்டி உண்டால், அவை உடனே உண்டவர்களின் உயிரைக் குடித்து விடும். காமத்திற்குக் கடினமான உலகப் பொருள்களும் தொடக்கத்தே இன்பந்தருவன போல் தோன்றும்; பின்பு தம் இயல்பறியாமல் நுகர்ந்தவருடைய பிறவிப்பயன் எய்தப் பெறாமல், அவரது உடம்பினை அழித்து விடும். எனவே பெரியோர் இக்காம நுகர்ச்சிப் பொருளே பெறக்கடவ பெரும்பேறென்று கருதமாட்டார்கள். நீ நின் ஆட்சியை மீட்காமல் இக்காம வெள்ளத்தில் அழுந்துவையாயின் உலக உயிர்கள் அழிந்து போகும். நீ காமத்தைக் கைவிடுதலே உறுதிதரும்" என்று அவர்கள் கூறிய அறிவுரை சமண மதக்கருத்தேயாயினும் அனைவருக்கும் பொதுவான அறிவுரையும் ஆகுமன்றே?

"துணிவுடையாளர் துன்னினர் குழீஇ
அணியுடை அண்ணற்கு அமைந்தமை காட்டி"

அறிவுரை கூறினர்.

'படுதிரைப் பௌவத்துக் கடுவளி கலக்கப்
பொறிய விழ்ந்து கவிழ்ந்த பொருகலத்தை'

உவமை கூறி விளக்கினர்.

பசிமூளவே,

‘திண்ணிலை வரைப்பில் சினைதொறும் செறிந்து
கண்நவை உறூஉம் கனிபல கண்டவை
நயவரு நஞ்செனப் பெயர்தெரிவின்மையின்’

அக்கினியைத் தேவாமிருதம் என உண்பர்; உயிர்விடுவர். காமமும் அதுபோலவே ஏமாற்றி அழிப்பதாகும்.

“தாமரைச் செங்கண் தகைமலி மார்ப
காமத்து இயற்கையும் காணும் காலை
இறுதியில் இன்பமொடு இனியது போல
உறுபயன் ஈனா உடம்புமுதல் தபுத்தலின்
பெறுபயன் இதுவெனப் பேணார் பெரியோர்”

இங்ஙனம் அத்தோழர்கள்,

‘கழுமிய காதல் கைவிடல் பொருள்எனக்
காமத்துக் கடையும் காதற் குற்றமும்
ஏமாப்பிலவென்று எடுத்துரை நாட்டினர்’.

இவ்வாறு இந்நூல் முழுதும் சமண மதக்கருத்துகள் மணிமிடை பவளம் போலவும் மணிகளைக்கோத்து மறைந்து நிற்கும் நூல்லோலவும் இலங்குவதை ஆழ்ந்து கற்போர் உணர்வர்.

இந்நூலின்கண் காணப்படும் இலக்கிய நயம்மிக்க பகுதிகள் பலவாகும். ஒரு நாள் பதுமாவதியும் வாசவதத்தையும் தம் தோழியரை இரு கூறாகப் பிரித்துப் பந்தாடும் படி செய்து மகிழ்வாராயினர். மகளிர் ஆடலை ஆடவர்கண் காணுதல் அக்கால வழக்கமன்று. எனவே அதனைக் காண விரும்பிய உதயணன் பெண்வேடமிட்டுப் பிடி ஒன்றில் ஏறிச் சென்று அதனைக் கண்டு களிப்படைந்தான். அக்கோப்பெருந்தேவியர் இருவருடைய தேவிமாரும் கண்டோர் வியக்கும்படி

திறம்பட ஆடாநின்றனர். அவர்களில் மானனீகை என்னும் தோழி அனைவரது பாராட்டையும் பெற்றாள். அவள் மீது உதயணன் காதல் கொண்டான். அவனை காமம் வருத்திற்று. மானனீகை வாசவதத்தைக்கு ஒப்பனை செய்பவள் என்றும் அவளுக்கு யவனமொழியும் தெரியும் என்றும் பிறரிடம் விசாரித்துத் தெரிந்து கொண்டான். அன்றிரவு தன் மாளிகைக்கு வந்த வாசவதத்தையைக் கூர்ந்து நோக்கி, 'உனக்கு ஒப்பனை செய்தவர் யார்? இது அழகைக் கெடுக்கிறது. யானே நின் அழகு விளங்குமாறு ஒப்பனை செய்வேன்' என்று கூறி, பூந்தாதினைச் சந்தனத்தோடு குழைத்து முல்லையரும்பாகிய எழுதுகோலில் தோய்த்து, அவ்வாசதத்தைக்குக் கோலம் செய்பவனைப் போன்று, யவன மொழியாலே ஒரு 'திருமுகம்' – கடிதம் வரைந்து மானனீகையின்பால் விடுத்தான். அக்கடித வாசகம் மிகவும் நயம் பொருந்தியதாகும்.

"ஒடியா விழுச்சீர் உதயணன் ஓலை
கொடி ஏர் மருங்குல் குயின்மொழிச் செவ்வாய்
மானனீகை காண்க!"

இங்ஙனம் தொடங்குகிறது கடிதம். பிறகு பந்தாடும் போது அவளைக் கண்டு தான் காமுற்ற செய்தியைக் கூறி, தன் காமநோயை அவள் அன்பே தீர்க்கும் என்று எழுதுகிறான்.

சேனுயர்
மாட மீமிசை மயில் இறை கொண்டென
ஆடன் மகளிரோடு அமர்ந்து ஒருங்கு ஈண்டி
முந்து பந்து எறிந்தோர் முறைமையிற் பிழையாப்
பந்து விளையாட்டினுள் பாவை தன் முகத்துச்
சிந்தரி நெடுங்கண்என் நெஞ்சகம் இழிப்பக்
கொந்தழற் புண்ணொடு நொந்துயிர் வாழ்தல்
ஆற்றேன் அவ்அழல் அவிக்கும் மாமருந்து
கோல்தேன் கிளவிதன் குவிமுலையாகும்.

அவள் பந்தடிக்கும் போது அவன் உள்ளம் பறையடித்ததாம். அவள் இடைக்கு ஆதாரமாகிச் சென்று, அவன் சிந்தையும் நுடங்கியதாம். எனவே என்

பெருந்துயர் தீர்க்கும் மருந்தும் நீயே என்று வேண்டுகிறான். உன் வேற்கண்ணும் மெய்யழகும் என்னிடத்தே நோயைப்படர விடுகின்றன. வெள்ளத்தில் வீழ்ந்தவனைப் புணை காப்பது போல, காமக்கடலில் நான் அழுந்தாமல் காப்பாயாக. உயிர் போய் விட்டால் எதுவும் பயனில்லை. இளமை சென்றால் திரும்ப வாராது. என்போல் இரப்பார்க்கு அளிப்பதே நன்றாகும்" என்று இவ்வாறெல்லாம் வரைந்து கடைசியில் கீழ்வருமாறு குறிப்பிட்டான்.

வாசவதத்தையின் நெற்றியல்லவா அது? எந்த மொழியானாலும் அதில் எவ்வளவு தான் எழுத முடியும்? வாசவதத்தையின் நெற்றியை நிலையாகக் கொண்டு இருவரும் யவனமொழியில் கடிதம் எழுதிக் கொள்கின்றனர். யவன மொழி சுருக்கெழுத்துப் போன்ற அடையாள மொழி போலும்! நினைத்த வாசகம் முழுவதும் எழுத இடம் போதாமையால் சுருக்கமாகக் கூறியுள்ளேன். கருத்தறிய வல்லவர்க்கு விரித்தெழுத வேண்டுவதில்லையே? பாவையே என் குறையை நீக்கி அருள்வாயாக!

என்று கடிதத்தை உதயணன் முடித்திருந்தான்.

பாடல் இது !

"நினைத்த வாசகம் நிரப்பின்று எழுத
இடத்தளவு இன்மையின் கருத்தறிவோர்க்குப்
பரந்துரைத்து என்னை பாவை! இக்குறை
இரந்தனென் அருள்!"

எத்துணை நுட்பமாக இக்காதற் கடிதம் எழுதப்பட்டுளது! பிற்காலத்தில் எழுந்த இலக்கியங்களில் இதற்கு நிகரானதை யாண்டும் காணுதல் இயலாது.

கடிதத்தைத் திருமுகம் என்று கூறுவர். வாசவதத்தையின் திருமுகத்தால் எழுதப்பட்டதால் இத்திருமுகம் - இரண்டு பொருளாலும் திருமுகமே ஆயிற்று எனலாம். மானனீகையும் வாசவதத்தையும் தேவி பெருமகன் எழுதிய பேரவங்காரத் திருமுகம் அழகுடைத்து என்றும் கடிதம் எனவும் முகம் எனவும் இருபொருள்படவே பேசுகிறார்.

அடுத்து, தமிழ்க் காப்பியங்களில் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் ஆகிய ஏழு பருவ மங்கையர் பற்றிய வருணனைகளும் அவர்கள் உலாவரும் அரசனைக் கண்டு காமுற்ற செய்தியும் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகிய உலாவில் இடம் பெறும். பெருங்கதையில் நீராட்டரவம் என வரும் உஞ்சைக் காண்டப்பகுதியில், பேதை மகளிர் சேதடியணிந்த கிண்கிணி அரவம், "பெதும்பை மகளிர் சிலம்பபொலி அரவம்" 'மங்கை மகளிர் பைங்காசரவம், மடந்தை மகளிர் குடைந்தாடரவம், அரிவை மகளிர் ஓலுறுப்பு அரவம், 'தெரிவை மகளிர் வரிவளை அரவம்' என இவ்ஏழுபருவ மங்கையர்தம் அரவமும் முறையே கூறப்படுகின்றன. இலாவாண காண்டத்தில் 'நகர்வலங் கொண்டது' என்ற பகுதியிலும் உதயணனும் வாசவதத்தையும் நகர்வலம் வரும் போது உதயணனைக் கண்டு பேதை, பெதும்பை, தெரிவையனைய மகளிர் பலரும் காதல் கொண்டனரென்று கூறப்படுகிறது. பிற்கால உலா இலக்கியத்திற்குப் பெருங்கதை இவ்வாறு வித்திட்டது என்றால், அது மிகையாகாது எனலாம்.

முத்தொள்ளாயிரத்தில் "தாயர் அடைப்ப மகளிர் திறந்திடத் தேயத் திரிந்த குடுமியவே", என்று மன்னவன் உலாவரும் வீதிக் கதவைப் பற்றி நயமாகக் கூறப்படுகிறது. இவற்றை நோக்க, முத்தொள்ளாயிரம், பெருங்கதை போன்ற நூல்கள் தோன்றிய காலப்பகுதியில்தான் அரசர்கள் உலா வரும் செய்தி புனையப்பட்டதென்றும், ஏழு பருவ மங்கையர் பற்றிய செய்தியைப் பெருங்கதை விரிவாக எடுத்துக்கூறி வருணித்துப் பிற்காலச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றிற்கு வழி காட்டிற்று என்றும் கூறலாம். தொல்காப்பியத்தில் பாடாண் திணையில் உள்ள ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப என்ற நூற்பாவிற்கு, உரையாசிரியர்கள் உலா இலக்கிய அடிப்படையையே எடுத்துக்காட்டி விளக்குவர். எங்ஙனமாயினும் இப்படி ஒரு இலக்கிய வகை, முகிழ்த்து வளர்ச்சியுறுவதற்குப் பெருங்கதையும் தூண்டுணர்வாக அமைந்தது என்பதை மறுக்கவொண்ணாது. இவ்வாறு பிற்கால இலக்கிய வளர்ச்சிக்குப் பெருங்கதை பல வழிகளில் உதவி இருக்கிறது எனலாம்.

பெருங்கதைக் காப்பியம் தமிழ் இலக்கியச் சோலையுள் பூத்த நறுமலராகும். அதன் கதை பிறமொழியினதாயினும் கற்பனையும் கருத்தும் கட்டமைப்பும் தமிழ்மொழியினுடையதேயாம். தமக்கு முற்பட்ட நூல்களனைத்தையும் கற்று, தமிழ் மரபுப்படி அவற்றைப் பயன்படுத்திய கொங்குவேள் ஒரு சிறந்த முன்மாதிரியைப் படைத்து விட்டார். திருக்குறளை அவர் எடுத்தாண்டுள்ள திறமொன்றே அவரது புலமைக்குச் சான்று பகரும்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற திருக்குறளை

"உடையழி காலை உதவிய கைபோல்
நடலை தீர்த்தல் நண்பனது இயல்பு"

என்று ஆசிரிய நடையில் விளக்குகிறார்.

நட்பின் சிறப்பை விளக்குமிடத்துத் திருவள்ளுவர்,

"நவில்தொறும் நூல்நயம்போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு"

என்றார். பழகுந்தோறும் பண்புடையார் நட்பு நன்மை தருகிறது; அது படிக்கும் தோறும் சுவைதரும் நூலினது நயம் போன்றதாகும் என்பது உவமிக்கப்பட்டுளது. இதனைச் சிறிது மாற்றி, கொங்குவேள் "படிக்கும் தோறும் அறிவு வளர்வது போல, பழகுந்தோறும் மேலான நட்பு உள்ளத்தை இன்புறுத்தும்" என்று பாடியுள்ளார்.

"நவில்தொறும் இனிய ஞானம் போலப்
பயில்தொறும் இனியநின் பண்புடைக்கிழமை
உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் இன்புற"

என்பது அப்பகுதி. கருத்துக்களை மட்டும் ஆள்கின்ற இடங்கள்; சொல், தொடர்கள் ஆள்கின்ற இட்ங்கள்; குறட்கருத்தைப் பின்பற்றி எழுந்த இடங்கள் எனப் பலவாறாகப் பகுத்து ஆராயும் அளவு திருக்குறள் பெருங்கதையில் ஆளப்பட்டுள்ளது. இவருக்குப் பின் வந்த, சீவகசிந்தாமணி ஆசிரியராகிய

திருத்தக்கதேவரும் இவ்வாறு பல இடங்களில், பலமுறைகளில் திருக்குறளை எடுத்தாண்டு, அதில் தமக்குள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்தியுள்ளார்.

மாலைப் பொழுது வருணிக்கப்படும் திறத்திற்குப் பெருங்கதையிலிருந்து ஒரு சான்று காண்போம்.

ஆண்களின் கடமை பொருள் தேடி வருவதாகும். அதற்காகத் தலைவியரைப் பிரிய நேர்வது இயல்பே. அதனைப் பொறுத்துக்கொண்டு காணவர் வரும் வரை காத்திருப்பதே பெண்களின் கடமையாகும். ஆடவர்கள் பிரிந்து சென்று மீள்வதற்கு எல்லை வகுக்கும் காலமே கார்காலமாகும். வீட்டின் புழக்கடைத் தோட்டத்திலே பூத்துக்குலுங்குகிற முல்லைப்பூ பெண்களிடம் இதைத்தான் கூறுகின்றதாம். "கவலைப்படாதீர்கள் ! பொறுத்து இருப்பது உங்கள் கடமையாகும். அவன் எல்லை வகுத்த காலம் வந்துவிட்டதால், வந்து விடுவான்" என்று ஆறுதல் கூறுகின்றனவாம்.

"ஆண்கடன் அகறல்! அதுநோன்று ஒழுகுதல்
மாண்பொடு புணர்ந்த மாசறு திருநுதல்
கற்புடை மகளிர் கடன்எனக் காட்டி
வினைக்கும் பொருட்கும் நினைத்துநீத்து உறையுநர்
எல்லை கருதியது இதுஎன மெல்லியல்
பணைத்தோள் மகளிர்க்குப் பயிர்வன போல
மனைப்பூங் காவின் மருங்கில் கவினிய
பைந்தார் முல்லை வெண்போது நெகிழ"...

சங்ககால மாலைப்பாடலுக்கும் இதற்கும் கற்பனையில் ஒரு வேறுபாடு காணப்படுகிறது. அங்குக் கார்காலமும் மாலைப் பொழுதும் முல்லை மலரும் தலைவியை வருத்துவனவாகவே பாடப்படும். "தொகு முகை இலங்கு எயிறாக, நகுமே தோழி நறுந்தண் காரே" என்றுதான் ஒக்கூர் மாசாத்தியார் புனைகின்றார். கார் கால மாலைப் பொழுது, கொடி முழுதும் பூத்திருக்கிறது மொட்டுகளால் – பல்வரிசையைக் காட்டித் தலைவியை எள்ளி நகையாடுகின்றனவாம் – "இதோ பார், உன் காதலன் சொன்னபடி வரவில்லை. இனி நீ வருந்தப் போகிறாய் நாங்கள் வருத்தப் போகிறோம்" என்று கொக்கரிப்பன போல அவை சிரிக்கின்றனவாம்.

இங்கு, பெருங்கதையில் "பணைத்தோள் மகளிர்க்கு ஆறுதல் உரைகளைப் பயிர்வன போல" - எடுத்துக் கூறுவன போல முல்லையின் வெண்போதுகள் மெதுவாக நெகிழ்கின்றன.

மாலைப் போது வந்ததும் சில வாவிப்போதுகள் - நீர்ப்பூக்கள் - தம் கண்களைப் புதைத்துக் கொள்கின்றன. அதற்கு உவமை என்ன தெரியுமா?

"வெறுக்கைச் செல்வம் வீசுதல் ஆற்றாது
மறுத்துக் கண்கவிழ்ந்த மன்னர் போல"

அஃதாவது வள்ளன்மையில்லாத மன்னர்களைப் போல, மாலையில் பசியோடுவரும் வண்டுகட்கு உதவாது நீர்ப்பூக்கள் மூடிக்கொள்கின்றனவாம். அதனைக் கண்டு, வண்டுகள் அப்புறம் ஓடி விடுகின்றன. வரையாது வழங்கும் வள்ளல் போல மல்லிகை வெண்மலர்கள் வண்டுகளை அழைத்து உண்பிக்கின்றன.

"உறுபொருள் நெஞ்சத்து உவப்பவீசி
வெறுவது விடாஅ விழுத்தகு நெஞ்சத்து
உரத்தகை யாளர்"

போல அவ்வெண்மலர்கள் உதவுகின்றன.

இனி, முல்லை நில வருணனையில் அதன் முதல், கரு, உரி என்ற மூன்றும் வெளிப்பட ஆசிரியர் புனையும் திறம் சங்கப்பாடல்களையும் விஞ்சிய கற்பனையாக இருக்கிறது. சங்கப்பாடல்களில் முல்லை நிலத்தே கார் காலத்து நிகழ்ச்சிகள் உள்ளவாறு புனையப்படும். கொங்கு வேளிர் முல்லை நிலத்தையே ஒரு தலைவியாகப் புனைந்து காட்டுகிறார். அவளுடைய தலைவன்தான் கார் காலம், இத்தலைவனாம் கார்காலம் தன் முல்லை நிலத்தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் சென்றிருந்தான். அவன் திரைகடலோடித் திரவியம் தேடினான். கடற்பரப்பில் நீர் பருகி நிமிர்ந்து, தன் காதலியை நோக்கி ஓடி வருகிறான். பொருட்செல்வத்துடன் வினைமுடித்த தலைவன் வருவது போலக் கார்காலமாகிய தலைவன் வருகின்றான்.

"பொருள்வயின் பிரிவோர் வரவுஎதி ரேற்கும்
கற்புடை மாதரிற் கதுமென உரறி
முற்றுநீர் வையகம் முழுதும் உவப்பக்
கருவி மாமழை பருவமொடு எதிரப்
பரவைப் பௌவம் பருகுபு நிமிர்ந்து"

நிலவுலகம் முழுதும் கற்புடை மகள் போல இக்கார்காலக் கணவனை வரவேற்று உவகை பூத்ததாம்; ஆரவாரித்ததாம்! கடலைக்குடித்து நிமிர்ந்த கார்காலத்தலைவன் தன் தலைவியின் வெப்பத்தைத்தணிக்க மேக விதானம் தண்மை பெற அமைக்கிறான். அதில் வானவில்லாகிய பூமாலையைத் தொங்கவிடுகின்றான். மின்னலாகிய விளக்குகளை எங்கும் எரிய விடுகின்றான். வெண்மணற் பரப்பிலே, துளி பல சிதறி, தன் தலைவியாகிய மண்ணக மடந்தையைக் கார்காலத் தலைமகன் மஞ்சனமாட்டுகிறான். முல்லை நிலக்கிழத்தி பொன்கலன்களாகிய அணிகளுடன் இரவிலே வந்து தழுவிய காதலனாகிய கற்காலத்தைக் கூடியதால் மடந்தையர் இடைபோலப் பேரழகு எய்திய சிறுசிறு கொடிகளை எங்கும் பரப்பினாள். அக்கொடிகள் அரும்பவே அது அவள் முறுவலிப்பது போல இருந்தது. இங்ஙனம் வந்துற்றது கார் காலம்.

"கொண்மூ விதானம் தண்ணிதிற் கோலித்
திருவில் தாமம் உருவுபட நாற்றி
விடுசுடர் மின்னொளி விளக்கமாட்டி
ஆலிவெண்மணல் அணிபெறத் தூஉய்" என்பது பாட்டு.

தன் காதலிக்காக அலங்காரம் செய்கின்றான் காதலன். விதானம் அமைத்து, தோரணம் தொங்கவிட்டு, விளக்குப் போட்டு, வெண்மணலும் பரப்பியுள்ளான். இயற்கையைக் காதலனாக்கி, முற்றுருவகம் போல இச்சொற்சித்திரம் வரையப்படுகிறது.

அடுத்தது தலைவியின் வெப்பத்தைப் போக்க அவளை மஞ்சனமாட்டுவது.

"தூநிறத் தண்துளி தானின்று சொரிந்து
வேனில் தாங்கி மேனி வாடிய
மண்ணக மடந்தையை மண்ணு நீராட்டினானாம்"

கணவன். அன்புமழை பொழிவதாகக் கூறுவோம் அல்லவா அதை அப்படியே உருவகப்படுத்திவிட்டார் ஆசிரியர்.

"முல்லைக் கிழத்தி முன் அருள்எதிரப்
பல்லோர் விரும்பப் பரந்துகண் அகன்று
பொருள் வயிற் பிரிந்து" சென்றான் காதலன்

பலரும் விரும்ப வேண்டுமேல் பொருள் வேண்டுமல்லவா, அதைத் தேடச் சென்றானாம். அங்ஙனம் சென்றவன் "பொலங்கல"மாகிய செல்வத்துடன் இரவிலே வந்து தன் தலைவியைத் தழுவுகிறான். மின்னலுடன் பெய்யும் கருவி மாமழை இவ்வாறு உருவகப்படுகிறது.

"பொலங்கல வெறுக்கையொடு
இருள்வயின் வந்த இன்னுயிர்க் காதலன்"

என்று கற்காலத்தை உருவகித்து, 'கார் வளம் பழுனிக் கவினிய கானத்தை ஆசிரியர் வளமுறச் சித்திரித்துள்ளார். இவ்வாறு உவமை, உருவகங்களின் மூலம் சொற்சித்திரமாக்கி உணர்ச்சி பொங்கப்பாடி, கண் முதலிய புலன்களுக்கு விருந்தாக்கும் அளவு கற்பனை அமைவதை மேலை நாட்டவர் 'உருக்காட்சி' என்பர். பெருங்கதையின் இம்முல்லை நில உருக்காட்சி உள்ளத்தைத் தொடுவதாகும்.

மேலும் முல்லை நில வளமெல்லாம் கூறி அவர் வருணிக்கும் திறமும் ஒப்பற்றதாகும். காப்பிய வருணனை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகும். ஒரு காப்பிய ஆசிரியன் தான் அறிந்த கலைகளையெல்லாம் புகுத்துவதற்கும், கருத்துகளையெல்லாம் பெய்து வைப்பதற்கும் காப்பியத்தைக் களமாக்கிக் கொள்வதாக மேலை நாட்டறிஞர் கூறுவர்

முல்லை நிலத்தில் என்னென்ன கிடைக்கும் என்பதற்கு ஒரு 24 பட்டியல் தருகிறார் ஆசிரியர்

"இறங்குகுரல் இறடி இறுங்குகடை நீடிக்
கனவக்கதிர் வரகும் கார்பயில் எள்ளும்

புகர்ப்பூ அவரையும் பொங்குகுலைப் பயறும்
உழுந்துங் கொள்ளும் கொழுந்துபடு கருணையும்
தோரையும் துவரையும் மாயவும் பிறவும்
அடக்கலாகா விடற்குஅரும் விளையுள்...
....
கொல்லைப் பெருங்குடிக் கோவலர் குழீஇய
முல்லைப் பெருந்திணை

இவ்வாறு முல்லைக்குக் கற்பனை வடிவு கொடுத்து, முழுவதுமாக உருவகப்படுத்தி விடும் போது, நமக்குச் சங்க இலக்கிய இயல்பு நவிற்சி மறைந்து, பிற்காலத் தற்குறிப் பேற்றம் தலை காட்டுகிறது. இளங்கோவடிகள் கார் காலத்தைக் கார் அரசாளன் என்று அரசனாக உருவகப்படுத்துவதை நாம் இங்கு ஒப்பிடலாம்.

சுவைகள் எட்டு என்பது தொல்காப்பியம். "நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை" என்ற அவை எட்டினையும் நாம் பெருங்கதையுடன் கற்றுச்சுவைத்து மகிழ்கிறோம். வாசவதத்தைக்குத் தெரியாமல் மானனீகை மேல் உதயணனுக்குக் காதல் ஏற்படுகிறது. ஆனால் மானனீகை இருக்க வேண்டிய இடத்தில் வாசவதத்தை வந்து நிற்கிறாள். அவளை உண்மையறியாத உதயணன் மானனீகை என்றே நினைத்துக் கொண்டு அணுகிறான்.

"முரசு முழங்கு தானை அரசொடு வேண்டினும்
தருகுவல் இன்னே பருவரல் ஒழியினி
மானே! தேனே! மானனீகாய்!"

என்று கூறி நெருங்குகிறான். கடைசி வரை மௌனம் சாதித்த வாசவதத்தை அவன் தன் காலிலே வீழ்ந்து வணங்கிய போது கொல்லெனச் சிரித்து விட்டாள். நாமும் இக்காட்சியில் அந்நகைச்சுவையில் பங்கு கொள்கிறோம்.

முன்பு வாசவதத்தையின் நெற்றியையே திருமுகமாகிய கடிதமாக்கி, உதயணனும் வாசவதத்தையும் யவனமொழியில் எழுதிப் பரிமாறிக் கொண்ட பொழுது நாம் சிரிக்க நேர்ந்தது. அதற்குப் பழிவாங்குவார் போல, ஈண்டு வாசவதத்தை நடந்து கொண்டு, வெற்றி பெறுகின்றாள்.

யூகி என்ற தன் அமைச்சன் இறந்துபட்டானாகக் கருதிய போது உதயணன் அவலமுற்றுப் பேசுமிடத்தில் அவலச் சுவை இடம் பெறுகிறது. வாசவதத்தை தீப்பற்றிய அரண்மனையில் அகப்பட்டு அவள் உடல் வெந்து போனதாகக் கருதி, உதயணன் அழுதுபுலம்புகிறான். அவள் அணிகலன்களை யெல்லாம் ஒவ்வொன்றாகக் கண்டு மனம் நெகிழ்கின்றான். காஞ்சனமாலை என்ற தோழி, தன் தலைவியாகிய வாசவதத்தை இறந்ததாகக் கருதிக் கல்லும் மண்ணும் உருகும்படி அழுகிறாள். காஞ்சன மாலையின் அழுகை பாடலில் இவ்வாறு வெளிப்படுகிறது.

“நாவலந் தண்பொழில் நண்ணார் ஓட்டிய
காவலன் மகளே! கனங்குழை மடவோய்!
மண்விளக்காகி வரத்தின் வந்தோய்!
பொன்னே! திருவே! அன்னே! அரிவாய்!
நங்காய் நல்லாய்! கொங்கார் கோதாய்!
வீணைக் கிழத்தி! வித்தக உருவீ!
தேனேர் கிளவீ! சிறுமுதுக் ககுறைவி
உதய குமரன் உயிர்த்துணைத் தேவீ!
புதையழல் அகவயிற் புக்கணையோ எனக்
கானத் தீயிடைக் கணமயில் போல”....

இவ்அழுகைக் காட்சியில் அவலத்தின் ஆழத்தைக் காணமுடிகிறது.

உதயணன் காமத்தில் அழுந்திக்கிடப்பதைக் கூறுமிடத்தில் இளிவரற்சுவை பளிச்சிடுகிறது. வியப்புச் சுவையும், பெருமிதச் சுவையும், வெகுளிச்சுவையும் இதன்கண் இடம்பெறும் பகுதிகள் பலவாகும்.

உஞ்சை நகரில் யூகியின் சூழ்ச்சியால் நகரம் தீப்பற்றி எரிய எழுந்த அச்சம் சுவைபட வருணிக்கப்படுகிறது. பெண்கள் அனைவரும் மயங்கித் தியங்கி ஓடி ஒளிகிற காட்சி படம் பிடித்தாற் போல் கூறப்படுகிறது. உவகைச் சுவையோ இந்நூல் முழுதும் விரவிக்கிடக்கிறது. நான்கு மனைவியரை ஒரு தலைமகன் மணக்கும் கதையில் உவகைச் சுவைக்குக் குறைவே இல்லை.

‘பெருங்கதை’ இத்துணைச் சிறப்புக்களிருந்தும் இன்று பெரிதும் பயிலப்பட்டிலது. பல்கலைக் கழகங்களில் பாடமாக வைக்கப்பட்டிலது. இதற்குக் காரணம் விளங்கவில்லை. ஆயினும் கூர்ந்து நோக்கினால் தமிழ்க் காப்பிய வளர்ச்சியை அறிய விரும்புவார்க்குப் பெருங்கதைக்கல்வி இன்றியமையாத தென்பது அறியப்படும்.

இவை போல்வன எல்லாம் சமயம் சார்ந்த நூல்களாயிருந்தும் சமயக் காழ்ப்புகள் மிக்கிருந்த காலத்தில் அழிந்து போகாமல் நிலைத்தமைக்குக் காரணம் என்ன? சமயத்திற்கும் மேலாக நனிமிகு சுவை பலவும் உள்ளங்கவரும் இலக்கிய உத்தி பலவும் இவற்றிடை இருந்தமையாலல்லவா, மக்கள் சமயங்கடந்தும் இதனைப் போற்றுவாராயினர்.

கம்பராமாயணம் யாப்பு வடிவம், கற்பனை, சொல்லாட்சி போன்றவற்றில் சீவகசிந்தாமணியைப் பின்பற்றியதென்றும், பிற்காலக் காப்பிய வளர்ச்சிக்குச் சீவகசிந்தாமணி பெரிதும் உதவிற்று என்றும் கூறுவர். கம்பரே சீவகசிந்தாமணியிலிருந்தும் ஓர் அகப்பை முகந்து கொண்டேன் என்று கூறியதாகச் செவிவழிச் செய்தி ஒன்று வழங்குகிறது. உண்மையில் சீவகசிந்தாமணி யாப்பு வடிவம் ஒன்றைத்தவிரப் பிற திறன்கள் பலவற்றிலும் பெருங்கதையைப் பின்பற்றியுளது என்பதை இந்நூல்களிரண்டையும் ஒப்பிட்டுப் பயில்வார் உணர்வர்.

இலக்கியம் அனைத்தையும் ஓர் ஆலமரத்திற்கு ஒப்பிடலாம் என்பர். முழுமை நோக்கமாக, உலக இலக்கியங்கள் அனைத்தையும் ஓரினப்படுத்திப் பார்க்க வேண்டும் என்பதை இது குறிக்கிறது. தமிழ் இலக்கியம் அனைத்தையும் அவ்வாறு பார்க்கும் பொழுது, இலக்கியங்கள் முன்னும் பின்னும் தொடர்புடையனவாய் இலக்கியப் பரப்பில் பின்னிப்பிணைந்து கிடப்பதைக் காணலாம். இவ்வகையில் பெருங்கதை முன்னைய மரபுகள் பலவற்றுக்கு வளர்ச்சி நிலை காட்டியிருக்கிறது. அந்தாதித் தொடை அமையப் பாடுவதை 4ஆம் பதிற்றுப்பத்திலும் 18 ஆம் ஐங்குறு நூற்றுப்பத்திலும் மட்டுமே முன்னதாக நாம் காண்கிறோம். அங்கு சங்கிலித் தொடர் போல, உதிரிப் பாடல்களை சொல்லளவில் இணைக்கவே அந்தாதி பயன்படுகிறது. கொங்கு வேளிரோ சொல் தொடர்பு மட்டுமல்லாமல் பொருள் தொடர்பும் அமைய அந்தாதியை அமைக்கலாம் என்று ஒருபடி வளர்ச்சி காட்டுகிறார்.

இங்ஙனம் பழைய மரபுகள் பலவற்றை வளர்த்ததோடு அல்லாமல், புதிய மரபுகள் பலவற்றையும் தோற்றுவித்த பெருமை அவருக்கு உண்டு. அவர் வளர்த்த புதிய மரபுகள் காப்பியக் கொள்கைகள் ஆதலின் அவை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மிகுந்த ஆக்கம் தருவனவாயின.

மீனாட்சி
புத்தக நிலையம்